முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1003

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

28.06.2022, செவ்வாய்கிழமை

1. பரபிரம்மமே மகா சூட்சுமமே
பரமானந்த சதாசிவ சற்குருவாய்
தரணியை காக்க என் அவதாரத்தை தேர்வு செய்து
தவசியாக வாழுகின்ற ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் ஆனி மாதம் 14 நாள், 28.06.2022 செவ்வாய்கிழமை)
வரமென உன்னால் இந்த கலியுகம்
வளமுற ஞான யுகமாக மாற்றம் பெறும்
3. தரமான உன் தர்மத்தாலும் சன்மார்க்கத்தாலும்
தரணியே தனித்துவம் பெற்று தர்மவான்கள் நிறைந்த ஞான பூமியாக
ஆகவே மாற்றமும் அற்புதமும்
அதீத வளர்ச்சியும் காணக்கூடும்
4. கூடவே முருகா என நீ தருகின்ற உயர் தீட்சை
முழுமை ஞானத்தை உலகோர்க்கு தந்து
பெருமை மிக்க ஞானவான்கள் ஆட்சியையும்
பேருலகத்தை ஞான ஆட்சியின் கீழும் கொண்டுவரும்
5. வருகவே அற்புதத்தை நடத்த
வரம் உமக்கு நித்தம் நித்தம் ஆறுமுகன்
சரவண ஜோதியாக தந்து வருகின்றேன்
சர்வ சூட்சுமமாய் உன்னோடு கலந்திருக்கின்றேன்
6. இருக்கவே அரங்கன் தொடர்பு கொண்ட எல்லோருக்கும்
இனிதே ஆறுமுகன் என் காட்சி உறுதிஉறுதி
கருத்தாக அரங்கன் தர்மத்தைக் காக்கின்ற செல்வந்தர்கள் தனவான்கள் தொண்டுபுரிகின்ற உயர் மக்கள்
அனைவருக்குமே இந்த கலியினில் கந்தவேலன் என் காட்சி உறுதிஉறுதி
7. உறுதி கொண்டு அரங்கனின்
ஓங்காரக்குடில் நோக்கி
உலகோர் சடுதி வந்து தொண்டு சேவை என
சகலவழியும் அரங்கன் அருளாசி பெற்றுவிட்டால்
8. பெற்றுவிட மாற்றம் பிசகின்றி
பேருலகம் ஞானவடிவாகக் கண்டு
உற்றதொரு ஞானவான்கள் நிறைந்த
உயர்வான ஞான ஆட்சி அரங்கன் ஞானத்தால் நடந்தேறும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—